# THIRUMARAI AASAAN

S. Rajanayagam

Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 29 August 2016 Issue - 8


ஆசிரியர் உரை

## அடிமைச் சிறுமியிடமிருந்து...

**ந**ம் எல்லோருக்கும் ஒரு கெட்ட பழக்கம் இருக்கிறது. இப்படி நான் எழுதுவதால் ஏதோ நம் எல்லோருக்கும் ஒரே ஒரு கெட்ட பழக்கம் தான் இருக்கிறதென்று நான் சொல்வதாக முடிவுக்கு வந்துவிட வேண்டாம். நான் அந்தப் பொருளில் கண்டிப்பாகக் கூறவில்லை. மாறாக, வேதத்தை நேசித்து வாசிப்பவர்களுக்கும், தேவனுடைய வார்த்தைகள் போதிக்கப்படு வதைச் சிலாகித்துக் கேட்பவர்களுக்கும் பொதுவாக இருக்கின்ற ஒரு கெட்ட பழக்கத்தையே குறிப்பிடுகிறேன். ஒருவருடைய தனிப்பட்ட வாழ்க்கையின் பெலவீனங்கள் இதில் அடங்காது. நான் கூற வரும் இக்கெட்ட பழக்கத்திற்கு விதிவிலக்கானவர்கள் வெகு சிலரே.

அட, அந்தக் கெட்ட பழக்கத்தைத் தான் சீக்கிரம் சொல்லுங்களே என்று அவசரப்படுகிறீர்கள். அப்படித்தானே! சரி, சொல்லுகிறேன். தேவன் மீதும், அவருடைய வார்த்தைகள்பாலும் மட்டற்ற பற்று வைத்திருக்கும் நம்மில் அநேகர், நம்முடைய பக்தி வாழ்வுக்கான பாடங்களைக் கற்றுக் கொடுப்ப தற்கு, நாம் விரும்பித் தெரிந்தெடுக்கும் தேவ மனிதர்கள் பக்திச் சிகரங்களா கவும், குணக்குன்றுகளாகவும் இருக்கவேண்டுமென்று விரும்பி, வேதாக மத்தின் பக்கங்களில் தேடிக் கண்டுபிடிக்கிறோம். ஒருவேளை, அவர்கள் ஏற்கனவே பார்த்த முகங்களாக இருந்தால் கூட, திரும்பத் திரும்ப அவர்களைச் சுற்றி வருவதில் நமக்குச் சங்கடம் ஏதுமிருப்பதில்லை. ஆகவே தான், நோவா, ஆபிரகாம், யோபு, மோசே, யோசுவா, தாவீது, தானியேல், எஸ்தர், ரூத், பேதுரு, பவுல், கொர்நேலியு, தீமோத்தேயு

என்று இப்படிப்பட்டவர்களையே பார்த்துக்கொண்டு வருகிறோம். இவர் களெல்லாம் நமக்குப் பாடம் கற்றுக்கொடுக்கத் தகுதியற்றவர்கள் என்று கண்டிப் பாக நான் கூறவில்லை.

மாறாக, இவர்கள் மட்டும்தானா? என்பதே என் கேள்வி. இப்படிப்பட்ட அணுகுமுறையால் நாம் தவறு செய்கிறோம் என்றே எண்ணுகிறேன். எப்ப டியெனில், தேவன் தம்முடைய ஞானத்தின்படியாகத் தம்முடைய ஆவியா னவரைக் கொண்டு வெளிப்படுத்திக் கொடுத்துள்ள வேதாகமத்தில், தம்மு டைய பாரபட்ச மற்ற பார்வையில், ஒருவரை மெச்சி, உயர்த்தி, சிறப்பான வார்த்தைகளால் அலங்கரித்துக் காட்டும் போது, அப்படிப்பட்டவர்களை நாம் சுத்தமாகத் கண்டுகொள்ளாமல் ஒதுக்கி வைப்பது எப்படிச் சரியாக இருக் கும்? நம்முடைய பங்கில் இது ஓர் எச்சுச் செயலாக இருக்காதா?

ஆகவே தான், இப்படிப்பட்டவர்களுக்காக நேரம் ஒதுக்கி, மாசு படிந்து மங்கிக் கிடந்த இவர்களை வெளிக் கொணர்ந்து, தூசு தட்டிச் சுத்தம் செய்து, மெரு கேற்றி மின்ன வைத்து, நீங்கள் ஏற இறங்கப் பார்க்கும்படி கடந்த வருடங்களில் செய்திருக்கிறேன். அப்பட்டியலில் டஜனுக்கும் மேற்பட்டவர்கள் இடம்பிடித்திருக்கிறார்கள். அவர்களைப் பற்றியெல்லாம் பேச இங்கு சமய மில்லாதபடியால், இம்மாதத்திற்கான பாத்திரத்திற்கு நாம் நேரிடையாகச் சென்று விடலாம்.

அவள் ஓர் அடிமைப் பெண். இல்லையில்லை, அடிமைச் சிறுமி. அந்த அழகுச் சிறுமியின் பெயரைக் குறிப்பிட எனக்குக் கொள்ளை ஆசை உண்டு. ஏனோ தேவன் வெளிப்படுத்தவில்லை. தேடித்தான் பார்க்கலாம் என்றால் எந்தத் தடயமும் கிடைக்கவில்லை. சரி, பெயரில்லாவிட்டால் என்ன, செயல்பாடுதானே முக்கியம். ஆகவே, செயலில் இறங்குவோம்.

இந்த ஆன்மீகச் சிறுமி பற்றிப் படித்து, ருசித்துப் பேசுவதற்கு ரூத், எஸ்தர் போன்று இவள் ஒரு புத்தகமாக இல்லை. அப்படியில்லாவிட்டாலும் பரவாயில்லை, ஆங்காங்கே உள்ள வசனங்களைப் பொறுக்கி எடுத்து இணைத்துப் பேசுவதற்குப் பல அதிகாரங்களில் இவள் பரவிக்கிடக்கவும் இல்லை. ஒட்டு மொத்தமாக இரண்டே இரண்டு வசனங்கள். அந்த இரண்டு வசனங்கள் இடம் பெற்றிருக்கும் அதிகாரத்தைக் கவனித்தால், இவள் கண்டுகொள்ளப்படாதபடி இவளை அமுக்குவதற்கு இரண்டு ஜாம் பாவான்கள் நிமிர்ந்து நிற்கிறார்கள். ஒருவர் **சீரியா நாட்டுப் படைத் தளபதி நாகமான்**, இன்னொருவர் **தேவதீர்க்கனாகிய எலிசா**. இவர்களின் ஆக்கிரமிப்பு நிழலால், இந்த அற்பச் செடி வளர வேண்டிய அளவுக்கு இவள்

வளரவோ, தெரிய வேண்டிய அளவுக்குத் தெரியவோ இல்லை. ஆயினும், இவள் ஓரங்கட்டப்படக் கூடியவளல்ல. ஏனைய தேவமனிதர்கள் எல்லோரையும் போல நமக்குப் பாடம் கற்றுக் கொடுக்க முற்றிலும் தகுதியானவளே.

II ராஜாக்கள் 5-ம் அதிகாரம், தேவனுடைய வார்த்தைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதற்காக, குஷ்டரோகி நாகமான், எலிசா ஆகியோரைப் பற்றிய சம்பவம் பெரும்பாலும் பேசப்படும். நிச்சயமாக, அதில் தவறேதுமில்லை. ஆனால், இவர்களைப் பற்றிக் காலங்காலமாகப் பேசி வரும் கிறிஸ்தவ சமுதாயம், பேசப்பட வேண்டிய இச்சிறுமி பற்றி வாயே திறக்காமல் மௌனமாகவே இருப்பது ஏன் என்பதே எனது ஆதங்கம்.

இம்மாதம் இச்சிறுமி பற்றி எழுதுவதற்கு, நமது ஆசானின் வழக்கத்திலிருந்து நாம் கொஞ்சம் விலகிச் செல்ல நேர்ந்து விட்டது. ஆம், வழக்கமாக, பின்னணித் தகவல்களுக்குப் போதுமான நேரம் ஒதுக்கி, தேவையான தகவல்களைச் சேகரித்துவிட்டு, நமக்கான பாடங்களுக்குள்ளாகச் செல்லுவோம். ஆனால், அம்முயற்சிக்கு இச்சிறுமி பெரிதாக இடங்கொடுக்கவில்லை. சரி, சிறுமி தானே, விட்டுவிடுவோம். குறைந்த பட்சம், அவள் பற்றி வேதவசனங்கள் எப்படிப் பேசியிருக்கிறதென்பதையாகிலும் தெரிந்து கொள்ளுவோம். “ **சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைப்பிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவள் தன் நாச்சியாரைப் பார்த்து, என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரனால் நலமாயிருக்கும். அவள் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கி விடுவார் என்றாள்** ” (II ராஜா. 5 : 2, 3).

அந்நாட்களில், சீரியா என்பது இஸ்ரவேலுக்கு வடக்கேயிருந்த கூடுதல் வலிமை பெற்ற ஒரு நாடு. அவ்வப்போது இஸ்ரவேல் நாட்டின் மீது போர் தொடுத்துக் கொள்ளையடித்துச் செல்வது இவர்களுக்கு வாடிக்கை. தேவனுடைய அனுமதியின்பேரில், இப்படி இஸ்ரவேலை சீரியா ராஜா மேற்கொள்வதற்குக் காரணமாய் இருந்தவன் படைத்தளபதி நாகமான். இவனுடைய படையெடுப்பால் சிறைபிடிக்கப்பட்டு வந்தவர்களில் ஒருத்திதான் இந்த அடிமைப்பெண். இவள் ஒரு சிறு பெண் என்று வேதாகமம் கூறுகிறது. இவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்து வந்தாள். இவள் வளரும் பிராயத்திலிருந்த ஒரு சிறுமியாக இருந்தபடியால், பொறுப்பான வேலைக்கான பக்குவம் போதாமல், “ எடுபிடி ” ஆளாகவே இருந்திருக்க வேண்டும். “ எடுபிடி ” ஒரு கடினமான வேலைதான்.

எஜமானியின் சீற்றத்துக்கு எப்போது ஆளாவோம் என்று தெரியாது. இப்படி வீட்டு வேலை செய்யும் சிறுமிகள் பெரும்பாலும் எஜமானியின் நலம் விரும்பிகளாக இருக்கமாட்டார்கள். ஆனால், இச்சிறுமி விதிவிலக்கான வளாக இருந்துள்ளாள்.

சரி, நமக்கு வயது எவ்வளவாக இருந்தாலும், எவ்வித கௌரவமும் பாராமல், இச்சிறுமிக்கு முன்பாகப் பவ்வியமாக அமர்ந்து இம்மாதத் திற்கான பாடங்களைக் கற்றுக் கொள்ள இப்பொழுது தயாராவோம்.

### I சிறுவயதில் பெற்றோர்களின் போதனைக்குச் செவிகொடுத்தாள்

இந்த “ எடுபிடி ”ச் சிறுமியிடமிருந்து நமக்குக் கிடைக்கும் முதல் பாடம், தன்னுடைய சிறு பிராயத்தில் பெற்றோர்களின் போதனையை ஏற்று வளர்ந்திருக்கிறாள் என்பது.

இச்சிறுமியின் சீர்மிகு பக்திச் செயல்பாடுகளுக்கான அடிப்படை இவளுடைய பெற்றோர். “ பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து ; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் ” (நீதி. 22 : 6 ) என்னும் ஞானியின் வாக்கை இக்காலத்துப் பெற்றோர்கள் துச்சமாக எண்ணும் போது, இச்சிறுமியின் பெற்றோர் அவ்வாக்கைக் கச்சிதமாகப் பிடித்து வாழ்ந்துள்ளார்கள். பக்திக் காரியங்களில் கர்த்தர் கொடுத்த தங்கள் பிள்ளைகளுக்கான பொறுப்பை உணர்ந்து வாழாத பெற்றோர்கள் தேவனுடைய பார்வையில் ஒருபோதும் சிறந்தவர்களாக இருக்க முடியாது. ஒருவேளை, அவர்களின் பாதுகாப்பான சரீர வாழ்வுக்காக நீங்கள் எவ்வளவு தான் பிரயாசை எடுத்திருந்தாலும் தேவனுக்கு அவைகள் ஒரு பொருட்டே அல்ல. அவைகள் அனைத்தும் இப்பூமிக்குரியவைகள், அழிந்து போகக் கூடியவைகள். ஆகவே, “ **கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும்** ” அவர்களை வளர்ப்பது ( எபே. 6 : 4 ) ஒவ்வொரு பெற்றோரின் கடமை.

பழைய பிரமாணங்கள் கொடுக்கப்பட்ட ஆரம்ப நிலையிலேயே பிள்ளை வளர்ப்பின் அவசியத்தை தேவன் மிக அழுத்தமாக எடுத்துச் சொல்லிவிட்டார். “ **இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக் கொள்ளுகிற போதும், எழுந்திருக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசு...** ” என்று (உபா. 6 : 6, 7). சொல்லப் போனால்,

பெற்றோர்களுக்கான இப்பொறுப்பை, அதற்கு முந்தின முற்பிதாக்களின் காலத்திலேயே தேவன் எதிர்பார்த்துள்ளார். எப்படியெனில், " **கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும் நீங்கள் நீதியையும், நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்** " (ஆதி. 18 : 19) சிறு பிராயத்திலிருந்து போதிக்கப்பட்டபடியால் தான், தீமோத்தேயுவால் " உத்தம குமாரனாக " ஒளிர முடிந்தது (II தீமோ. 3 : 15, I தீமோ. 1 : 2).

இப்பொழுதாகிலும் புரிகிறதா? போதனை கொடுப்பதும், போதனையை ஏற்றுக்கொள்வதும் தேவனுடைய பார்வையில் எவ்வளவு கனமானது என்று. ஆகவே, பெற்றோர்களே, உஷாராயிருங்கள். சிறு பிராயத்தில் போதனையை ஏற்றுக்கொள்ள எந்தக் குழந்தையும் தயாராகவே இருக்கும். ஆகவே, ஐந்திலேயே வளைத்து விடுங்கள். இல்லாவிட்டால் பத்திலே அது முத்திவிடும். இருபதிலே இறுகிப்போகும். முப்பதிலே முறிந்துவிடும். அதற்கு மேல், ஆன்மீகத்தில் சர்வமும் சீரழிவுதான். என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பது குறித்துத் தீர்க்கமாகச் சிந்தித்து, இனி என்ன செய்ய வேண்டுமென்பது பற்றி தீர்மானம் செய்யுங்கள். இச்சிறுமியும், இவளின் பெற்றோரும் உங்கள் நெஞ்சில் நீங்காத இடம் பிடிக்கட்டும்!

### II தேவன் மற்றும் தேவ மனிதனின் வல்லமையை அறிந்திருந்தாள்

இந்த " எடுபிடி "ச் சிறுமியிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அடுத்த பாடம், தான் நம்புகிற தேவனுடைய மற்றும் தான் கண்ட தேவ மனிதனுடைய வல்லமை பற்றிப் புரிந்து வைந்திருந்தாள் என்பது.

பவுலடியார் தன் விசுவாச ஓட்டத்தை வெற்றிகரமாக முடித்ததற்கான (II தீமோ. 4 : 6 - 8) காரணங்களில் ஒன்று, " **தான் விசுவாசித்திருப்பவர் யார் என்பதை** " (II தீமோ. 1 : 12) ஐயத்திற்கிடமின்றி அறிந்து வைத்திருந்தது தான். இந்த அறிவு தாவீது அரசனுக்குள்ளாகவும் இருந்தபடியால் தான், அவனாலே, " **உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன். என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்** " (சங் 18 : 29) என்று மார்தட்ட முடிந்தது. இந்தத் தெளிவு அவன் ஆடு மேய்க்கும் இளைஞனாக இருந்த போதே இருந்தபடியால் தான், ராட்சச உருவம் கொண்டிருந்த " **பெலிஸ்தன் கோலியாத்தை நோக்கி : நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய். நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின்**

**தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன் "** (I சாமு. 17 : 46) என்று சவால் விட முடிந்தது.

பவுல், தாவீது போன்ற தேர்ந்த தேவமனிதர்களிடம் காணப்பட்ட அபார நம்பிக்கை இவளிடமும் இருந்துள்ளது. எப்படியெனில், குஷ்டரோகம் என்பது ஒரு கடும் வியாதி. முற்றிலும் ஒழிக்க இன்றளவும் மருத்துவ உலகம் போராடிக் கொண்டிருக்கிறது. அந்நாட்களில் கேட்கவே வேண்டாம். வைத்தியனும் இல்லை, வைத்தியமும் இல்லை. இயேசு ஆண்டவரின் கூற்று இதற்குச் சான்றாக உள்ளது. " **அல்லாமலும் எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவேலருக்குள்ளே அநேகம் குஷ்டரோகிகள் இருந்தார்கள்; ஆயினும், சீரியா தேசத்தானாகிய நாகமானையல்லாமல் அவர்களில் வேறொருவனும் சுத்தமாக்கப்படவில்லை என்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார் "** (லூக். 4 : 27).

ஆம், அன்றைய நாட்களில் குஷ்டரோகி ஒருவன் சுகம் பெற்றான் என்பது ஊரும், உலகமும் அறிந்திராத ஒன்று. அப்படிப்பட்டதொரு காலத்தில், தான் சொல்லுகிறபடி நடக்கவில்லையென்றால், கேட்பாரற்ற நிலையில் இருக்கும் தன் உயிருக்கே ஆபத்து நேரிடலாம் என்பதையும் பொருட்படுத்தாமல், " ... என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும் ; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கி விடுவார் " என்று உறுதிபடக் கூறினாளே! இது எப்படி? நம்மால் முடியுமா? பெயரில்லாத சிறுமியே, உனக்கு ஆயிரம் வணக்கங்கள்.

அருமையானவர்களே, தேவனின் வல்லமை பற்றி நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை எப்படிப்பட்டதாயுள்ளது? நன்றாகத் தெரிந்து கொள்ளுங்கள். இச்சிறுமி சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவின் மீது நம்பிக்கை வைக்கவில்லை. மாறாக, எலிசாவின் தேவன் மீது தன் நம்பிக்கையை வைத்திருந்தாள். தேவனுக்கு உண்மையாயிருக்கும் தேவ மனிதர்களை, தேவன் தன் நோக்கத்திற்காகப் பயன்படுத்த முடியும் என்பதில் ஒரு தெளிவு அவளிடம் இருந்தது. இக்காரியத்தில் நாம் எப்படி? இன்றைய கிறிஸ்தவம் தேவன் பெயரைச் சொல்லிக் கொண்டு ஊரை வலம் வரும் எல்லா மனிதர்களையும் நம்புகிறது. ஏமாந்து போக வேண்டாம். இச்சிறுமி நினைவிலிருக்கட்டும்.

### III **சூழ்நிலை தன்னை பாதிக்க அனுமதிக்காதவள்**

இந்த " எடுபடி " ச் சிறுமியிடமிருந்து நமக்குக் கிடைக்கும் இன்னுமொரு

பாடம், சூழ்நிலை தன் விசுவாசத்தைச் சீண்டிப்பார்க்கவிடாமல் தன்னைப் பாதுகாத்துக்கொண்டாள் என்பது.

விசுவாச வாழ்க்கையில் தள்ளாடித் தாறுமாறாய் ஓடுகிறவர்களைப் பார்த்து, “ ஏன் இப்படி ” என்ற கேள்வியை எழுப்பினால், அவர்கள் கொடுக்கும் பொதுவான பதில், “ என் சூழ்நிலை அப்படி ”, “ என் நிலை தேவனுக்குத் தெரியும் ” என்பது. தேவனுக்குத் தெரியாமல் எதுவுமில்லை. தேவனுக்கு எல்லாம் தெரியும் ( சங். 139 : 1 – 10 ) என்பது யாருக்குத் தெரியாமலிருக்கிறது? தங்களுடைய பக்தி வாழ்க்கையின் சறுக்கலுக்கும், தோல்விக்கும் இவர்களின் இப்படிப்பட்ட பதில், ஆன்மீக வாழ்க்கையில் இவர்களின் கையாலாகத்தனத்தைத் தான் இது பறை சாற்றுகிறதே யொழிய வேறில்லை.

இப்படி ஒருவன் தன் அவபக்தியான வாழ்க்கைக்குத் தன் சூழ்நிலையைக் காரணம் காட்டித் தப்பிக்க முடியுமானால், இச்சிறுமிக்குக் கிடைத்த வாய்ப்பு போல் வேறு யாருக்குமே கிடைத்திருக்காது. ஒருவேளை, நீங்கள் யோசேப்பு, தானியேல் போன்றவர்களும் தங்களை அந்நிய மண்ணில் கறைபடாமல் காத்துக் கொண்டது பற்றி இங்கே குறிப்பிடலாம். உண்மை தான். ஆனால், அப்பொழுது அவர்கள் ஓரளவு **பண்பட்ட வாலிபப் பிராயத்தில்** இருந்தார்கள். ஆனால், இச்சிறுமியோ முழுமையாகப் பக்குவமடையாத ஒரு **இரண்டுங்கெட்டான் பருவத்தில்** இருந்தாள். புரிகிறதா? மேலும், அவர்களிருவரும் அதிகாரம் கொண்ட ஒரு பெண்ணின் கீழாக அடிமைகளாக இருக்கவில்லை. ஒரு நாச்சியாரின் கீழாக வீட்டு வேலைகளைச் செய்வது எவ்வளவு பெரிய நச்சுப்பிடித்த வேலையென்பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. இன்றைக்கே நிலைமை இப்படி என்றால், அந்நாட்களில் சொல்லவா வேண்டும்?

போதாக்குறைக்கு சீரிய தேசம் விக்கிரக வணக்கம் கொண்ட ஒரு நாடு. ஆகையால், தீராத குஷ்டம் கொண்டிருந்த நாகமானின் குடும்பத்தார் போகாத கோயிலும், கும்பிடாத சாமியும் இருந்திருக்காது. வைத்தியத்தால் கைவிடப்பட்டவர்களின் கடைசிப் புகலிடம் கோயிலும், குளமும் தான். அப்படி அவர்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் இச்சிறுமியும் சென்றிருக்கவே வாய்ப்புண்டு. பொதுவாக எஜமானும், நாச்சியாரும் கும்பிடும் போது, ஒரு வேலைக்காரப் பெண் அங்கு ஒதுங்கியா நிற்க முடியும்? “ பாம்பு தின்னும் ஊருக்குப் போனால், நடுக்கண்டம் எனக்கு ” என்று சொல்லிப் பழகியது தானே இச்சமுதாயம். ஆனால், இச்சிறுமி தன்

விசுவாச வாழ்வில் அசராமல் நின்று, பக்தி வாழ்க்கையில் பிசிறில்லாமல் வாழ்ந்து காட்டியுள்ளாள்! சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ (தானி. 3 : 17, 18) மற்றும் தானியேல் (தானி. 6 : 10) போன்றவர்கள் விக்கிரக வணக்கத்திற்கு எதிரான தங்கள் நிலைக்கு இவளைத்தான் முன்னுதாரணமாகக் கொண்டிருந்திருப்பார்களோ? யாருக்குத் தெரியும்?

இவள் பற்றி நான் இன்னொன்றையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். ஆம், " **நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு, அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய்** " (II ராஜா. 5 : 10) என்ற தீர்க்கனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய வெகு நேரம் எடுத்துக் கொண்ட நாகமான், **சமாரியாவிலிருக்கும் தீர்க்கதரிசியினிடத்தில் போவது நலமா யிருக்கம்** என்னும் அடிமைச் சிறுமியின் சொல்லுக்கு உடனடியாகத் கீழ்ப்படிந்துள்ளானே. அது எப்படி? " கோணலும், மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாயிருங்கள் " ( பிலி. 2 : 15 ) என்னும் பவுலுடைய வார்த்தைகளின் தாற்பரியம் இவளுக்கு அப்போதே எப்படித் தெரிந்திருந்தது? இவ்வசனம் நமக்கெல்லாம் இன்றளவும் சவாலாக இருக்கும்போது, எஜமானியின் குடும்பம் தன் சொல்லை அப்படியே ஏற்றுக்கொள்ளும் படியான அளவுக்கு அவர்களுக்கு முன்பாக அவள் வாழ்ந்து காட்டியுள்ளாளே! தலையே சுத்துது?!

ஆகையால், அருமையானவர்களே ! இம்மாதம் இப்பக்திச் சிறுமி தரும் பாடங்களை நாம் மறுக்காமல் ஏற்றுக்கொண்டு, இவளைப் போன்ற தொரு ஆன்மீக வாழ்க்கையை நாமும் வாழ நம்மை ஒப்பு கொடுப்போம். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிக்கட்டும். ஆமென் ! ஆமென் !! ●

## பாடுகள் நன்மையாக முடியுமா?

ஆம்! பாடுகள் நன்மையாக முடியலாம். உதாரணமாக, " வலி " (pain) என்ற உணர்வே இல்லையானால் என்னாகும்? நம்முடைய உடையில் அதுபோலத்தான் தீப்பற்றிவிட்டால், என்ன நடந்திருக்கிறது என்று உணரும் முன்பே சரீரம் முழுவதும் வெந்து போகும். மனிதன் தன்னுடைய தலையாயப் பண்புகளை வளர்பதற்குப் பாடுகள் உதவி செய்கிறது. பொறுமை, தைரியம், போன்ற அருங்குணங்கள் பாடுகள் மூலம் கிடைப்பவைகளே.

# சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்கள்

Bro. J.C சோட்

சுவிசேஷத்தின் உண்மைகளும்,அதற்கான கட்டளைகளும் கொடுக்கப் பட்டிருப்பது போல அதற்கான ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டிருக்கிறது. உண்மைகள் நம்புவதற்காகவும், கட்டளைகள் கீழ்படிகிறதற்காகவும், ஆசீர் வாதங்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து, அதற்கு கீழ்படிகிறவர்கள் பெற்றுக் கொள்ளும்படியாகவும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார். " நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் ; அவர் கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய சகல ஆசீர்வா தத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். ( எபே. 1 : 3 ) " ரோமாபுரியில் இருந்த சகோதரர்களுக்கு அவர் எழுதுகையில், நான் உங்களிடத்தில் வரும் போது கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் சம்பூரணமான ஆசீர்வாதத்தோடே வருவேனென்று அறிந்திருக்கிறேன் (ரோமர் 15 : 29) என்கிறார்.

அதில், சில ஆசீர்வாதங்கள் என்ன? அநேகம் உண்டு. ஆனால் அதில் முக்கியமான சில காரியங்களைப் பட்டியலிடுகிறோம்.

**1. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதினால் ஒருவன் பாவ மன்னிப்பை பெறுகிறான்:**

“பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள், மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப். 2 : 38). ஒருவன் இரட்சிக்கப்பட்டான் என்று சொல்வதற்கு வேறு வழியும் உண்டு. ( மாற். 16 : 16 ), அவன் மறுபடியும் பிறந்தவன் ( யோவா. 3 : 5 ) ஒருவனுடைய எல்லாப் பாவங்களும் ஞானஸ்நானத்திலே மன்னிக்கப்பட்டு, அவன் புதியதொரு வாழ்க்கையை துவங்க ஆயத்தமாகிறான் என்ற உண்மை எத்தனை அருமையானதாக இருக்கிறது.

**2. சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவதன் மூலம் ஒருவன் கிறிஸ்துவுக்கு உள்ளாக வருகிறான்:**

“ கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியா மலிருக்கிறீர்களா? ( ரோம 6 : 3 ) ” . நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக் கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டீர்களே ”. ( கலா. 3 : 26 , 27 ) ( II கொரி. 5: 17 ). நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதால், அவருக்குள் தேவன் நமக்கு வைத்திருக்கும் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் சொந்தமாக மாறுகிறோம்.

### 3. சுவிசேஷத்திற்கு ஒப்புக்கொடுக்கும் போது கிறிஸ்துவின் சபைக்குள்ளாக வருகிறான் :

I கொரி. 12 ம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் பவுல் கிறிஸ்துவின் சரீரத்தைக் குறித்து அதிகமாக விவரித்தார். அந்த சரீரம் சபை என்று நமக்கு சொல்லப்படுகிறது. (கொலோ. 1 : 18 , எபே. 1 : 22 , 23) ஞானஸ் நானத்தின் முலமாகத்தான் நாம் அந்த சரீரத்திற்குள்ளாக போகிறோம் என்பதை அவர் விளக்குகிறார். “ எதிலே மற்ற சபைகளுக்குக் குறைவா யிருந்தீர்கள்? நான் உங்களை வருத்தப்படுத்தாதிருந்ததே உங்களுக்கு குறைவு; இந்த அநியாயத்தை எனக்கு மன்னியுங்கள் (II கொரி.12 :13) ” . உலகமனைத்திலும் சபையானது மகத்தானதொரு அமைப்பாக திகழ்கிறது. அதை அழிக்கவே முடியாது. அது என்றென்றைக்கும் நிலை நிற்கும். இந்த சரீரத்திற்குள்ளாக இருப்பது எத்தனை பாக்கியமானது.

### 4. நாம் இப்பொழுது தேவ புத்திரர்களாயிருக்கிறோமாதலால் கிறிஸ்தவர்களாகவும் இருக்கிறோம்:

ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படா மலிருந்து அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் (I பேதுரு. 4 :16) ஏன்? ஏனென்றால், கிறிஸ்துவின் நாமத்தில் இரட்சிப்பு உண்டு. அவரா லேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை ; நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே யல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை ” (அப் 4 : 12) இதைக்குறித்து சிந்தித்துப்பாருங்கள், நாம் அவரை விசுவாசித்து, அவர்தம் போதனைகளுக்கு கீழ்ப்படிந்தால் அவருடைய நாமத்தை நாம் தரித்துக்கொள்ளும்படி அனுமதிக்கிறார். இதுவே நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறது.

**5.கிறிஸ்தவர்களாக இருக்கும் நம்மால், தேவனை ஆராதிக்க முடிகிறது:**

' உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும். அது இப்பொழுது வந்திருக்கிறது. தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர் களா யிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார். அவரை தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும். என்றார். ( யோவா. 4 : 23 , 24 ) " . நாம் ஒன்றாக கூடிவருதலை விட்டு விடக்கூடாது என்று புத்தி சொல்லப்படுகிறோம். " சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக் கடவோம். நாளானது சமீபத்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும் ". (எபிரே. 10 : 25) . தேவனை ஆராதிப்பதற்கு, கர்த்தருடைய ஜனங்களோடு கூடி வருவது எத்தனை இன்பமாக இருக்கிறது. இதை நாம் ஒரு சுமையாகவோ, நாம் செய்ய வேண்டிய கடமை என்றோ எண்ணாமல், இதை முக்கியமாக எண்ணுதல் வேண்டும். நமது முக்கிய விருந்தினராக ஆண்டவர் இருப்பதாக வாக்கு செய்திருக்கிறார். அவர், சொல்லும்போது " ஏனெனில் இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே இங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவில் இருக்கிறேன் " என்றார். (மத். 18 : 20)

**6. ஐக்கியம் என்கிற ஆசீர்வாதமும் உண்டு:**

" அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந் நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். (அப். 2 : 42) " . கிறிஸ்தவர்களாக இருக்கும் நமக்கு, நம் சக கிறிஸ்தவர்கள் தரும் ஊக்கம் மிக அவசியமாக இருக்கிறது. வாரந் தோறும் நமது கூடுகையின் நோக்கத்தில் ஒன்றாக இது இருக்கிறது. இந்த பந்தத்தினால் ஆராதனையில், கிரியைகளினால், வரும் பலன் ஐக்கியமாக இருக்கிறது. ஆகவே மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கிறது.

**7. ஜெபம் என்னும் சிலாக்கியம் நமக்கு உண்டு :**

தேவன் எல்லாருடைய ஜெபத்தையும் கேட்பதில்லை. வேதம் சொல்லுகிறது. " பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கின்றேன்; ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவி கொடுப்பார். (யோ. 9 : 31) " வேறு வார்த்தையில் சொல்லுவோமானால், ஜெபம் என்பது தேவனுடைய பிள்ளைகளுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கும் சிலாக்கியமாயிருக்கிறது.

அவர்கள் தான் " தகப்பன் " என்று சொல்லி தேவனிடத்தில் சேர முடியும். இருப்பினும் நம்முடைய ஜெபம் கேட்கப்பட்டு, அதற்கு சாதகமான பதில் தரப்படவேண்டுமென்றால், நம்முடைய ஜெபம் அவருடைய சித்தத்தின்படி அமைய வேண்டியது அவசியம். " நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம் ( I யோவா. 5 : 14 ) இன்னுமாக எபிரேய ஆசிரியர் சொல்லும் போது, " ஆதலால், நாம் இரக்கத்தை பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம். ( எபி. 4 : 16 ) ". ஜெபத்தினால் நாம் பெற்றுக் கொள்ளும் மிகப் பெரிய ஆசீர்வாதத்தைப் பற்றி பேசுகிறார். நமது பிரச்சனை, துக்கம் அல்லது கர்த்தரிடத்தில் நாம் சொல்ல வேண்டியது எதுவாக இருந்தாலும், அதை பற்றி நாம் கவலைப்படாமல், அவர் நமக்கு தந்த மிகப் பெரிய சிலாக்கியத்தை எண்ணி நாம் சந்தோஷப்படலாம். அது மாத்திரமல்ல நாம் அவரிடம் இவைகளை சொல்லும்போது, அவருடைய பிள்ளைகள் என்ப தையும், நம்முடைய வேண்டுதலுக்கு இரங்குவார் என்பதை புரிந்து கொண்டு தக்க பலனை அளிப்பார் என்பதையும் அறிந்தவர்களாக ஜெபிக்கலாம்.

**8. ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் நாம் கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்கையில் அவரை நினைவுகொள்ளும் பாக்கியத்தைப் பெறுகிறோம்:**

பவுல் அதைக் குறித்து இப்படியாகப் பேசுகிறார். " நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக் கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கிய மாயிருக்கிறதல்லவா? (கொரி. 10 : 16) " நமக்காக மரித்தவரின், இரத்தத் தையும், அவருடைய சரீரத்தையும் நாம் நினைவு கூர்ந்து அவருக்கு மரியாதை செலுத்துவது உண்மையில் நமக்கு கிடைத்த மிகப்பெரிய பாக்கியம். அதினாலே நாம் ஆவிக்குரிய பெலனை நாம் இன்னும் அதிகமாக பெற்றுக் கொள்ள முடியும்.

**9. கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்த நாம், பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுகிறோம்:**

அப். 2 : 38 ம் வசனத்தை நாம் கவனித்தால், அதில் நாம் மனந் திரும்பி பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும் போது, பரிசுத்த

ஆவியின் வரத்தைப் பெறுகிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் நம்மோடு வாசமாக இருப்பது எத்தனை பெரிதான ஆசீர்வாதம். அதற்கு ஈடு இணை எதுவுமில்லை. இதைவிட மேலான வேறு எந்த சிலாக்கியம் நமக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

**10. அவருக்காக வாழும் சிலாக்கியமும், இப்புவியில் அவரை மற்றவர் களுக்கு காண்பிக்கும் பாக்கியமும் கிடைக்கிறது:**

" வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். (கொலோ. 3 : 17 ) ", கிறிஸ்து தாமே இவ்விதமாக சொன்னார், முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். ( மத். 6 : 33 ) ".

**11. கர்த்தருடைய வழியை மற்றவர்களுக்கு போதிக்கும் சந்தோஷத் தையும், கர்த்தர் எப்பொழுதும் நம்மோடு இருக்கிறார் என்பதையும் அறிந்துகொள்ளலாம்:**

சத்தியத்தைப் போதித்து கிறிஸ்துவின் பக்கமாக ஒருவனை இழுப்பதை விட மற்றவர்களுக்கும் இவ்வுலகத்திலும் நாம் செய்யும் மிகப்பெரிய காரியம் வேறு எதுவாக இருக்க முடியும் ? அதுமாத்திரமல்ல, அவருடைய சித்தத்தின்படி நாம் தொடர்ந்து நடக்கையில் அவர் இப்பொழுதும், எப்பொழுதும் நம்மோடு இருப்பேன் என்ற வாக்கு செய்திருக்கிறார் என்பதை வாசியுங்கள். எத்தனை அதிசயமானது அவர் என்ன சொல்கிறார் என்பதை வாசியுங்கள். ஆகையால், நீங்கள் புறப்பட்டுபோய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத். 19 : 20 )

**12. இறுதியாக, நாம் அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, அவருக்கு உண்மையாக நடந்தோமானால், நமக்கு அவர் ஜீவ கிரீடத்தை அல்லது நித்திய ஜீவனைத் தருவேன் என்கிறார்:**

" ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் " (வெளி. 22 : 14 ) " நீ படப்போகிற பாடு

களைக் குறித்து எவ்வளவும் பயப்படாதே ; இதோ, நீங்கள் சோதிக்கப்படும் பொருட்டாக பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான் ; பத்து நாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மை யாயிரு, அப்பொழுது ஜீவ கிரீடத்தை உனக்குத் தருவேன் (வெளி 2 : 10).

கர்த்தர் தம்முடையவர்கள் மீது அக்கறை இல்லாதவர் என்று யார் சொன்னது? கிறிஸ்தவ வாழ்க்கை சந்தாஷமில்லாதது என்று யார் சொன் னது? கிறிஸ்தவ வாழ்க்கை நமக்கு ஒன்றும் தராது என்று யார் விளம் பியது? ஒருவன் வாழக்கூடிய வாழ்க்கையில் கிறிஸ்தவ வாழ்வே மிகச் சிறந்ததாகவும் மிகவும் பலன் தரக்கூடியதாகவும் இருக்கிறது. ஒருவன் பாரத்திலிருந்து விடுபட்டு, சமாதானமான வாழ்க்கை வாழவும், அநேக காரி யங்களை எதிர்பார்க்கவும், அதற்காக வாழவும் கிறிஸ்தவம் ஒருவனுக்கு வழிவகை செய்கிறது. அவன் இம்மையிலும், மறுமையிலும் ஆசீர்வதிக்கப் படுகிறான். அவன் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும் போது அவனுக்கு இவைகள் எல்லாம் கிடைக்கிறது. அதுதான் வாழ்க்கையின் துவக்க நேரம். அங்குதான் அளவில்லாத ஆசீர்வாதங்கள் ஆரம்பமாகிறது.

## தேவனுடைய வார்த்தைகளின் மேன்மை

நம்முடைய போர்ஆயுதம் பட்டயமோ அல்லது துப்பாக்கியோ அல்ல. ஆனால், தேவனுடைய சர்வாயுதவர்க்கமாயிருக்கிறது ( எபேசியர் 6 : 13 - 18 ). போர்க்களம் தூரத்தில் இல்லை. நம் மனதுக்குள்ளும், இருதயத்திற்குள்ளும் தான் இருக்கிறது. நாம் மேற்கொள்ள வேண்டிய சத்துருக்கள் நம் பயமும், சந்தேகமும்தான் இப்போரில் நாம் வெற்றி பெறுவதற்கான வழிமுறைகளை தேவனுடைய வார்த்தை நமக்கு கற்றுத்தருகிறது. ஆகையால், தேவனுடைய வார்த்தையை நாம் தியானிப்போமா?

பெண்கள் பகுதி

# உள்ளதையெல்லாம் கொடுத்தவன்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

சென்ற மாத தொடர்ச்சி...

**அ**வர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப் போட்டார்கள். இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனுத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டு விட்டாள் என்றார். ( மாற்கு. 12 : 44).

இருதயத்தை பார்க்கிற நமதாண்டவராகிய இயேசு கிறுஸ்து, தனக்குள்ளதையெல்லாம் கர்த்தருக்காகப் போட்டுவிட்டாள் என்பதை அறிந்து, அதைப் பாராட்டாமல் விடவில்லை. அவளுடைய நல்ல செயலை அங்கீகரிக்கிறார். வேதாகமத்திலே நாம் பார்க்கும் பொழுது, ஆதாமின் காலத்திலிருந்தே தேவனுக்கு மனிதன் கொடுக்க வேண்டும் என்ற ஒழுங்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. மனிதன் தனக்கு கொடுக்க வேண்டும் என தேவன் எதிர்பாக்கிறார். நாம் எந்த அளவு பெற்றுக் கொள்ளுகிறோமோ அந்தளவு கொடுத்தலும் இருக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டில், மோசேயின் பிரமாணத்தின் கீழ் வாழ்ந்தவர்கள் பத்தில் ஒரு பாகம் கொடுக்க வேண்டுமென்று கட்டளையாகப் பெற்றி ருந்தார்கள். இயேசு கிறிஸ்து பழைய பிரமாணத்தை சிலுவையிலே ஆணி யடித்து விட்ட பிறகு (கொலோ 2 : 14) இப்பொழுது கிறிஸ்துவின் காலத்திலே வாழும் நமக்கு கொடுத்தல் பற்றி வசனம் என்ன சொல்லுகிறதென்று பார்ப்போம்.

அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். (2 கொரி. 9 : 7).

நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு உங்களில்

அவனவன் வாரத்தின் முதல்நாள் தோறும், தன்தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன் (1கொரி. 16 : 2 ).

மேற்கண்ட வசனங்களில் இருந்து நாம் எதைக் கற்றுக்கொள்ளு கிறோமென்றால், ஒரு கிறிஸ்தவன் தேவனுக்கு எதைக்கொடுத்தாலும் உற்சாகமாய் கொடுக்க வேண்டும். வாரத்தின் முதல் நாளில் தான் கொடுக்க வேண்டும். அதிகமாய் கொடுக்கிறவன், அதிகமாய் கொடுக் கிறவன், அதிகமாய் பெற்றுக்கொள்கிறான்.

ஒரு குடும்பத்திலே பணத்தை கையாளுவது யாராக இருந்தாலும், கர்த் தருக்கு தாராளமாய் கொடுப்பதில் பெண்களுக்கு மிக அதிகமான பொறுப்பு இருக்கிறது. எந்த ஒரு காரியத்தைச் செய்வதாக இருந்தாலும் அதில் வந்தவுடன், முதலில் தேவனுக்குரியதை எடுத்து வைத்து விடவேண்டும். ஒரு பெண் நினைத்தால், பலவகையில் செலவைக் குறைத்து அதில் மிச்சமாக தொகையை தேவனுக்கும், தேவனுக்கடுத்த காரியங்களுக்கும் கொடுத்து உதவலாம்.

உலகிலுள்ள அனைத்து கிறிஸ்தவர்களும், வேதாகமம் சொல்லுகிறபடி கொடுத்தால், தேவனுடைய வேலைகளை இன்னும் பலமாகவும், பரந்த அளவிலும் செய்ய உதவும்.

என் இருதயம் எங்கேயிருக்கிறதென்பதை என் கொடுத்தல் காட்டிவிடும். என் இருதயம் எங்கே இருக்கிறது ? எந்த அளவு என்னுடைய கிறிஸ்தவ குணம் உறுதியாய் இருக்கிறதென்பது நான் தாராளமாக கர்த்த ருக்கு கொடுப்பதின் மூலம் பரீட்சிக்கப்படுகிறது. நான் அந்த பரீட்சையில் தேறுவேனா? ஆத்துமாக்களை ஆதாயம் செய்து கொள்வதற்கும், அவர்களை பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்கு என்னுடைய காணிக்கை உதவி செய்கிறது.

எப்படி இயேசு கிறிஸ்து அன்றைக்கு காணிக்கைப் பெட்டியருகே உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தாரோ அப்படி இன்னும் என் காணிக் கையை கவனித்துக் கொண்டிருக்கிறார். ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நாம் கொடுக்கும் பணம் மட்டுமே பரலோகம் வரை செல்லக்கூடிய ஒரு சேமிப்பாக அமையும். என்னுடைய ஆன்மாவை நான் காத்துக் கொள்ள வேண்டுமானால் எனக்குள்ளதெல்லாவற்றையும் தாராளமாய் கர்த்தருக்கு கொடுக்க வேண்டும். இது ஓர் ஆலோசனையல்ல, கட்டளையாக

கொடுக்கப்பட்ட ஒன்று. எனவே, கட்டளையாக கொடுக்கப்பட்ட ஒன்று. எனவே , கட்டளைக்கு கீழ்ப்படிவது நம்மீது விழுந்த கடமை.

அருமையானவர்களே, இந்த ஏழை விதவை இத்தனை உண்மை களையும் அறியாதவளாகத்தான் இருந்தாள். அவள் காலத்தில், எழுதப் பட்ட புதிய ஏற்பாடு இல்லை. இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பது முழுமையாகத் தெரியாது. இயேசு கிறிஸ்து, இரத்தத்தை சிந்தி, மரித்து சபையை உருவாக்கவுமில்லை. ஆனாலும், கொடுக்க வேண்டும் என்பதை தெரிந்து வைத்திருந்த அவள், ஜெப ஆலயத்தில் வந்து தன் கடமையை முழுமையாக செய்து நிறைவேற்றுகிறாள். யாரைப்பற்றியும், எதைப்பற்றியும் கவலைப்படவில்லை. தனக்கு தெரிந்தவற்றில் முழுமையைப் பெற்றிருந்தாள்.

வேதாகமத்தில் பார்க்கும்பொழுது, தேவன் ஒருபோதும் ஒரு மனித னுடைய அந்தஸ்துக்கு முக்கியம் கொடுத்ததேயில்லை. மாறாக, அவன் ஏழையாயிருந்தாலும், சாதாரண வேலை செய்கிறவனாய் இருந்தாலும், கூலிக்காரனாய் இருந்தாலும், ஆடு மேய்ப்பவனாயிருந்தாலும், வியாதியஸ்தனாயிருந்தாலும் அவன் தோற்றத்தைப் பார்க்காமல் செயல் பாட்டைத் தான் பார்க்கிறார். எனவே தான், இயேசுவின் கண்ணில் இந்த ஏழை விதவைபட்டாள். ஏழையாயிருந்தாலும் பணக்கார செயல் இவளிடம் இருந்தது.

இன்றைக்கு எத்தனை பேர் கர்த்தருக்கு கொடுக்க வேண்டியதை கொடாமல்,அதிலிருந்து திருடி, நம் சொந்த செலவை செய்து கொண்டுள்ளோம்? தேவன் நம் செயலை கவனித்துக் கொண்டிருக்கிறார். தேவனுடைய பாராட்டுதலை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், நம் செயல்பாடு உண்மையுள்ளதாக இருக்க வேண்டும். பிறர் பார்வைக்காக காரியம் செய்வோமானால் இயேசுவின் கண்களில் கிருபை கிடைக்காது.

இதை வாசிக்கும் அருமைச் சகோதரிகளே, கொடுக்கும் விஷயத்தில் நம் நிலை எப்படி இருக்கிறது. நம் பிள்ளைகளுக்கு கொடுத்தலின் அவசியத்தை கற்றுக்கொடுப்போம். தேவன் நம் செயலை ஒரு நாளைக்கு அங்கீகரிப்பார். மட்டுமல்லாமல், சுத்தமான, மெய்யான சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட நமக்குள்ளதெல்லாம் கொடுப்போம். இயேசு நம் அருகில் உட்கார்ந்து நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார். ஏழை விதவையைப் போல் செயல்படுவோம். மீதியை கர்த்தர் பார்த்துக் கொள்வார். ஆமென்! .

வாலிபர் பகுதி

# இயேசுவை நாம் எப்படிக் காண்கிறோம்?

Bro. பென்னி மார்ட்டின்

வாலிபர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லவராம் இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்துக்களை தெரிவித்திக் கொள்கிறேன். நம் எல்லோருக்கும் சில முக்கியமான காரியங்களைக் குறித்த உண்மையை அறிய வேண்டுமென்கிற ஆவல் எப்போதுமே இருக்கும். அவைகளைப் பற்றி விவாதிக்கும் போது முடிவு எட்டப்படவில்லையென்றால் நாம் திருப்தியடையவே மாட்டோம். இது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்கிற விஷயத்திலும் உண்மையாயிருக்கிறது. அவரைப்பற்றி யாரோ ஒருவருடைய அபிப்பிராயத்தை அறிய நாம் விரும்புவதில்லை. யார் அந்த இயேசு? அவர் உண்மையாகவே தேவனுடைய குமாரனா? ஜீவனைப் பற்றியும், இரட்சிப்பைப் பற்றியும் அவர் என்ன சொல்கிறார்? அதை அறிந்து கொள்வதிற்கு நாம் போக வேண்டியது இவ்வுலகிலேயே உண்மையான, துல்லியமான வேத புத்தகத்திற்குத்தான். கிறிஸ்துவின் போதனைகளை நாம் நிச்சயபடுத்திக் கொள்ள தேவன் நம் கைகளில் அதை தந்திருக்கிறார். நம் அருமை இரட்சகராகிய இயேசுவைப் பற்றி இவ்வுலகிலுள்ள மகான்கள் பல தத்துவங்களை உதிர்திருக்கிறார்கள். சிலர் அவரை மாபெரும் போதகர் என்றும், மிகச்சிறந்த மனிதன் என்றும் அடையளாபடுத்துகிறார்கள். ஆனால், இயேசுவை நாம் எப்படிக் காண்கிறோம்? அவரைப்பற்றி வேதாகமம் என்ன சொல்கிறார் என்று பார்ப்போம்.

**I அவர் இரட்சகராயிருக்கிறார்**

முதலாவதாக, இயேசு கிறிஸ்துவை இரட்சகர் வேதவசனங்கள் அழைக்கின்றன. இரட்சகர் என்ற வார்த்தை மிகப்பெரிய ஆபத்திலிருந்து மற்றவர்களைக் காப்பாற்றுகிற ஒருவரை குறிக்கும். இயேசு ஒரு சாதாரண இரட்சகர் அல்ல. அவர் ஒரு தனித்துவம் வாய்ந்த இரட்சகர். உதாரணமாக, எரிகிற ஒரு கட்டிடத்திலிருந்து ஒரு மனிதன் ஒரு குழந்தையைக் காப்பாற்றினால் அந்த மனிதனை இரட்சகன் அல்லது காப்பற்றுகிறவன் என்று சொல்கிறோம்.

இயேசு கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நம் பாவங்களிருந்து நம்மை இரட்சிக்கிறபடியால் அவரை நாம் ஆவிக்குரிய இரட்சகர் என்றழைக்கிறோம். (மத்தேயு 1 : 21). பாவமானது ஆரம்பத்திலிருந்தே மனிதனுக்கு ஒரு பிரச்சனையாக இருந்து வருகிறது. இவ்வுலகில் அநேகர் தாங்கள் பாவிகள் என்பதை ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். பிரியமான வாலிபர்களே! நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் பாவம் செய்திருப்போம். அந்தப் பாவங்களிலிருந்து நம்மை நாமே இரட்சித்துக் கொள்ள முடியாது. நாம் பாவிகள் என்பதை நமக்கு சொல்வதற்கு வேதாகமமே தேவையில்லை. நம் வார்த்தைகளை, நம் செயல்களை, உற்று நோக்கினால் நாம் பாவிகள் என்பதை உணர்ந்து கொள்வோம். அப்படியென்றால், இந்தப் பாவத்திலிருந்து நம்மை யாரால் இரட்சிக்கக் கூடும்? மனோதத்துவத்தால் நம்மை மன்னிக்க முடியாது. நேர்மையான சிந்தனை நம்மை மன்னிக்காது. அப்படியானால், நம் கதி என்ன? இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்ததிற்கான பிரதான நோக்கம் நம் பாவங்களிருந்து நம்மை இரட்சிக்கும்படிக்குத்தான் (I கொரிந்தியர் 15 : 3).

இது சம்மந்தமாக மாவீரன் நெப்போலியனுடைய படையில் ஒரு ராணுவ வீரனின் கதை நம் நெஞ்சைத் தொடுவதாக உள்ளது. இந்த வீரன் துணிச்சலுடைய எஜமான விசுவாசமுடைய வீரனாக இருந்தான். போருக்கிடையில் அவன் தன் கூடாரத்தில் அமர்ந்து தன் குடும்பத்தைப் பற்றியும், குடும்பத்திற்கு தான் நிறைவேற்றவேண்டிய கடமைகளைக் குறித்தும் சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு நாள் தனக்கிருந்த கடனையும் தன் குடும்பத்தைப் பராமரிபதிற்குத் தேவையான பணத்தையும் ஒரு தாளில் எழுதிக்கொண்டிருந்தான். தன் கடனை திருப்பிச் செலுத்துவதிற்கும், குடும்ப செலவிற்கும் தேவையான பணம் தன்னிடம் இல்லாததை எண்ணி சோர்வில் ஆழ்ந்து போனான். மிகுந்த மனச்சோர்வில் அந்தத் தாளின் அடிப்பகுதியில் இந்த கடன்களைத் தீர்ப்பதற்கு யார் இருக்கிறார்? என்று எழுதினான். பின்பு தூங்கச் சென்று விட்டான். அந்த நாளில் நெப்போலியன் தன் வீரர்களின் கூடாரத்தைப் பார்வையிடும்படியும், அவர்களுடைய நிலைமையை ஆராயும்படியாகவும் திடீரென வந்தார். அப்போது தூங்கி கொண்டிருந்த அந்த வீரனையும், அவன் எழுதிவைத்திருந்த கடிதத்தையும் பார்த்தார். அப்போது நெப்போலியன் தன் பேனாவை எடுத்து “ நான் இதை கட்டித்தீர்ப்பேன் ” என்று எழுதினார். பிரியமானவர்களே, நம் பாவக் கடனை கட்டித்தீர்ப்பதற்கு இவ்வுலகில் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாருண்டு?

## II அவர் கிறிஸ்துவாயிருக்கிறார்

இரண்டாவதாக, நம் ஆண்டவராகிய இயேசு " கிறிஸ்து " என்றழைக்கப்படுகிறார். கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள். கிரேக்க மொழியில் " கிறிஸ்து " என்பதும், எபிரேய மொழியில் " மேசியா " என்பதும் ஒன்றுதான். புதிய ஏற்பாடு இயேசுவை வாக்குதத்தம் செய்யப்பட்ட ஒருவராக, தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவராக அடையாளப்படுத்துகிறது. தீர்க்கதரிசிகள் கிறிஸ்து வரப் போவதை முன்னறிவித்தார்கள் (ஏசாயா 9 : 6,7) மீகாவின் தீர்க்கதரிசனத்தை சற்று உற்று நோக்குங்கள். " எப்பிராத்தா என்னப்பட்ட பெத்தலேகமே, நீ யுதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார். அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது. (மீகா 5 : 2 ) மேலும் , புதிய ஏற்பாடு தீர்க்கதரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டவர் கிறிஸ்து என்பதை நிரூபிக்கிறது. இயேசு கிறிஸ்து தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் இறுதிப் பகுதியில் தம்முடைய சீஷர்களிடம் இவ்விதமாகக் கேட்டார். அதற்கு அவர்கள் சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும் வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளுள் ஒருவர் என்றும் சொல்கிறார்கள் என்றார்கள் மத்தேயு ( 16 : 13, 14 ) அவர்களுடைய பதிலுக்குப் பிறகு இயேசு அவர்களைப் பார்த்து " நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக : நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். புதிய ஏற்பாடு இயேசுவை, " கிறிஸ்துவாக " தேவனால் விஷேமாக தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவராக அடையாளப்படுத்துகிறது. பிரியமான வாலிபர்களே, இப்படிப்பட்ட கிறிஸ்துவை நாம் நம்முடைய இரட்சகராக பெற்றிருப்பது நாம் பெற்ற பாக்கியமாகும்.

## III அவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார்

" மூன்றாவதாக புதிய ஏற்பாடு இயேசுவை தேவத்துவத்தில் ஒருவராக, " தேவனுடைய குமாரனாக " அடையாளப்படுத்துகிறது. யோவான் ஸ்நானன் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்திற்கு வழியை ஆயத்தப்படுத்துவதற்கு தேவனால் தெரிந்தேடுக்கப்பட்டார். அப்போஸ்தலனாகிய யோவான் இயேசு தேவனுடைய குமாரன் என்பதற்கு நமக்கு மூன்று சாட்சிகள் கொடுக்கப் பட்டிருப்பதாக கூறுகிறார். பூலோகத்திலே சாட்சியிருக்கிறவைகள் மூன்று ஆவி ஜலம், இரத்தம் என்பவைகளே. இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது ( I யோவான் 5 : 8 ). பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்று

கரையேறினவுடனே, அவர் மீது புறாவைப்போல இறங்கி இயேசு தேவனுடைய குமாரன் என்று சாட்சி பகிர்ந்தார். I யோவான் 5 : 8 ல் ஜலம் என்பது இயேசுவின் ஞானஸ்நானத்தைத்தான் குறிக்க வேண்டும். அவர் ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே " இவர் " என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன். " என்று யோவான் குறிப்பிடுவது இயேசுவின் மரணத்தை அடையாளப்படுத்துகிறது. இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது நடந்த அற்புத சம்பவங்கள் இயேசுவின் தெய்வீகத் தன்மையை விவரிக்கிறது. இயேசு தேவனுடைய குமாரன் என்பதைக் குறித்து தேவனே, பரிசுத்த ஆவியானவரே சாட்சி கொடுக்கும்போது அதைவிட மேலான சாட்சி யாருக்கும் அவசியமில்லை.

ய ார் இந்த இயேசு? இதற்கான பதிலைப்பற்றிய எந்த சந்தேகத்தையும் புதிய ஏற்பாடு நமக்கு விட்டு வைக்கவில்லை. மேலும், புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்து " தேவனுடைய குமாரன் " என்பதை மிகத் தெளிவாகப் போதிக்கிறது. எனவே, இயேசுவை நாம் இரட்சகராக கிறிஸ்துவாக, தேவனுடைய குமாரனாகக் காண்போமென்றால் அவரிடத்தில் அன்பு கூர்ந்து, அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள நாம் பாடுபடுவோம். தேவன் தாமே அதற்கு உதவிச் செய்வாராக ஆமேன் !

## நீதிமொழிகளில் புத்திமான்

- தன் உதடுகளை அடக்குகிறவன் புத்திமான் (10 : 19 ; 17 : 28)
- நீடிய சாந்தமுள்ளவன் மகா புத்திமான் (14 : 29)
- புத்திமானுடைய மனம் அறிவை சம்பாதிக்கும். (15 : 14)
- புத்திமான் தன் நடக்கையைச் செம்மைப்படுத்துகிறான் (15 :21)
- புத்திமானைக் கடிந்து கொள், அவன் அறிவுள்ளவனாவான் (19 : 25)
- புத்திமானுடைய உதடுகளில் விளங்குவது ஞானம் (10 : 13)

சிறுவர் பகுதி

# தவறு செய்ய மறுத்த வாலிபன்

Bro. ஏபில் நாயகம்



**எ**ன் அன்பு சிறார்களே உங்களை இந்த மாதம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். நமதாண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழத்துகிறேன். மாதந்தோறும் இடம் பெறும் பகுதிகள் உங்களுக்கு பயனுள்ளதாய் இருக்கும் என நம்புகிறேன். இம்மாதம் ஒரு சிறந்த கதையை உங்களுக்கு சொல்கிறேன். என்னோடு வாருங்கள்.

தேவனுக்கு பிரியமாக நாம் எப்படி வாழ வேண்டும் என்பதைப் பற்றியும், தேவனைப் புரிந்து கொள்ளவும் அநேக வேதாகம கதைகள் நமக்கு உதவியாயிருக்கின்றன். அதிலிருந்து ஒரு கதையை இந்த மாதம் நான் உங்களுக்குக் கற்றுத் தருகிறேன். அந்தக் கதையில் யாரைப் பற்றி நாம் பார்க்கப் போகிறோம். வாசியுங்கள் ( தானி. 6 : 1 – 28 ) சரி, உள்ளே செல்லுவோமா?

தரியு என்னும் பேர்கொண்ட ராஜா ஒருவன் இருந்தான். அவனுக்கு சில பிரதானிகளும், மந்திரிகளும் இருந்தார்கள். அந்தப் பிரதானிகள் ராஜாவைத்

தவிர யாரிடத்திலும் ஜெபிக்கக் கூடாது என்றும், அப்படி ஜெபிப் பவர்கள் சிங்கங்களின் கெபியில் போடப்பட வேண்டும் எனவும் கூறி னார்கள். ராஜாவும் அதற்கு ஒப்புக் கொண்டார். அதன்படி, ஒரு மாதம் முழுவதும் யாரும் ஜெபிக்கக் கூடாது என சட்டம் விதித்தார்.

ராஜாவிற்கு பிரியமான, உண்மையான பிரதானியாக ஒருவன் இருந்தான். அவன் பெயர் **தானியேல்** அவன் தேவ னுக்குப் பிரியமும், உண்மை யுமாய் நடக்கிறவன். ராஜா வினிடத்தில் ஜெபிப்பது தவறு என்பதை உணர்ந்தான். எனவே தேவனிடத்தில் அவன் ராஜாவின் கட்டளையைப் பொருட்ப டுத்தாமல் தொடர்ந்து எப்பொழுதும் போல ஜெபம் செய்தான். ஆம், அவன் மூன்று வேளையும் ஜெபம் செய்தான்.

ஆனால், மற்ற பிரதானி களோ தானியேலுக்கு எதிராக எண்ணங்கொண்டு ராஜாவி னிடத்தில் போய் தானியேலை போட்டுக் கொடுத்தார்கள். அதைக் கேட்டதும் ராஜா மிகவும் சோர்ந்து போனார். ஏனென்றால் தானியேல், ராஜாவுக்குப் பிரியமானவன். ஆனால், சட்டம் தானியேலை சிங்கக்கெபியில் போடப்பட வேண்டும் என இருந்தது. எனவே, தானியேல் சிங்ககெபியில் போடப்பட்டான்.

அந்த நாளின் இரவு நேரத்தில் தரியு ராஜாவிற்கு தூக்கமே இல்லை. அவர் சோர்ந்து போனார். ஏன் தெரியுமா? நான் முன்னே சொன்னது போல் தானியேல் ராஜாவுக்கு மிகவும் பிரியமானவன். அடுத்த நாள் சிங்க கெபியினிடத்திற்கு வந்து அவன் உயிரோடிருக்கிறானா எனத் தெரிந்து கொள்ள தானியேலைக் கூப்பிட்டார்.

தானியேல் பதிலாக ‘‘ **ராஜாவே சிங்கங்கள் என்னை சேதப்படுத் தாதபடிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி அவைகளின் வாயைக் கட்டிப் போட்டார்** ” (தனி. 6 ; 22) என கூறினான். அதைக் கேட்டதும் ராஜாவுக்கு ஒரே மகிழ்ச்சி. ராஜா தன் வேலை ஆட்களை கூப்பிட்டு தானியேலை கெபியிலிருந்து தூக்கி விடச் சொன்னான்.

தானியேலுக்கு எதிராக எண்ணங்கொண்ட தீய பிரதானிகளின் மீது ராஜா கோபம் கொண்டார். எனவே, அவர்களையும் அவர்கள் குடும்பத்தையும் கெபியில் போட்டார். அந்த சிங்கங்கள் அவர்களைக் கொன்று போட்டன.

இந்த தானியேல் நம்

எல்லோருக்கும் ஒரு சிறந்த உதாரணமாவார். அவன் தவறுசெய்ய நினைக்காமல் தேவனிடத்தில் ஜெபம் செய்தான். எனவே, தேவன் தானியேலை காப்பாற்றினார். சிங்கங்களின் வாயில் இருந்து அவனைத் தப்புவித்தார்.

இதிலிருந்து நாம் கற்க வேண்டிய பாடம், மற்றவர்கள் நம்மை தீங்கு செய்ய சொன்னாலும், நாம் தீமையை செய்யாமல் எப்பொழுதும் தேவனுக்குப் பிரியமானதையே செய்ய வேண்டும். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபிக்கிறவர்களாக இருக்க வேண்டும். அப்போது எந்தத் தீமையும், சூழ்ச்சியும் நம்மை ஒன்றும் செய்யாது புரிகிறதா?

# நாளும் நடப்பும்

1. சென்னை மெட்ரோ ரயிலின் முதல் கட்டப் பணிகள் அனைத்தும் 2017 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.
2. பிரேசிலில் உள்ள ரீயோடிஜெனிரோவில் 31 வது ஒலிம்பிக் போட்டிகள் இம்மாதம் 5 ஆம் தேதி கோலாகல துவங்கியது.
3. இந்திய ரஷ்ய கூட்டு முயற்சியில் உருவான கூடங்குளம் அணு உலையை இந்திய மற்றும் ரஷ்ய பிரதமர்கள் காணொலிக்காட்சி மூலமாகத் திறந்து வைத்தனர்.
4. 2022 ல் விவசாயிகள் வருவாயை இரட்டிப்பாக்க மத்திய அரசு இலக்கு.
5. சரக்கு மற்றும் சேவை வரி மசோதா ஒருமனதாக நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.
6. நாடு முழுவதும் தென்மேற்கு பருவமழை தீவிரம் – விவசாயிகள் மகிழ்ச்சி.

# எது புதிய ஏற்பாட்டு அற்புதங்கள்?

Bro. EZS. செல்வநாயகம்

**ப**வுல் சொல்லுகிறார். அற்புதங்கள் செய்யக் கூடிய வரங்கள் ஒரு நாள் முடிவுக்கு வருமென்று. அவைகள் நித்தியமானவைகளல்ல. முதல் நூற்றாண்டில் அப்போஸ்தலர்களுடைய கால கட்டத்திலேயே அவைகள் முடிவுக்கு வந்துவிட்டன.

ஒரு வேளை, இது உண்மையாக இருந்தால், இன்றைக்கு அற்புதங்கள் செய்கிற வரங்கள் தங்களுக்குண்டு என்று சொல்லுபவர்கள், தங்களை ஏமாற்றிக் கொண்டு மற்றவர்களையும் ஏமாற்றுபவர்கள் என்று தானே அர்த்தம். அநேக காரியங்கள் போலியானவைகள் சிலர் இதை உண்மையென்று உத்தமமாய் நம்பிக் கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலருக்கு எது உண்மையான அற்புதங்கள் செய்யும் வரம் , எது பொய்யான அற்புத வரம் என்றே புரியாமலிருக்கிறது. ஆகவே சில விளக்கங்களைப் பார்ப்போம்.

சிலர், ஆச்சரியமான நிகழ்வுகளை, ' அற்புதம் ' என்கின்றனர். மிகவும் வியாதியாயிருக்கிற ஒருவர் மருந்து சாப்பிட்டு அல்லது அறுவை சிகிச்சை செய் யப்பட்டு சுகமடைவதை இவர்கள் அற்புதம் ( Miracle ) என்கின்றனர். இன்றைய தற்கால அற்புத நிகழ்வுகளுக்கும், பரிசுத்த வேதாகம அற்புத நிகழ்வுகளுக்கும், பரிசுத்த வேதகாமத்தில், அற்புதங்களை அடையாளங்கள், அற்புதங்கள், பலத்த செயல்கள் என சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இவை எல்லாமே ஏதோ ஒன்றை சுட்டி காண்பித்து சாட்சியிடுகின்றன.

அற்புதங்கள் என்றால், இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள். பரிசுத்த வேதகாமத்து அற்புதங்களுடைய பிரதானமான நோக்கம் ஒன்றை உறுதிபடுத்த ( Confirm ) இது உண்மை வசனம் உறுதிபடுத்தப்பட ( மத்.9; 4-5 ; மாற்கு. 2 ; 10 - 11 யோவான். 21 ; 24, 25. அப். 2 ; 32 - 33).

எபிரேய எழுத்தாளர் மிக அருமையாக சொல்லுகிறார். " தேவன் தாமே உறுதிபடுத்தி சாட்சி கொடுத்திருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பை விட்டு விலகினால் தண்டனைக்கு எப்படித் தப்புவோம்" ( எபி.2 ; 3 - 4 ) ஆகவே அற்புதங்கள், அவர்களுடைய ( இயேசு கிறிஸ்து, அப்போஸ்தலர்கள் )

செய்தியோடு வந்ததன் காரணம் வசனம் உறுதிபடுத்தப்பட ( மாற்கு. 16 ;17 ). மேலும் அற்புதங்களுடைய அடிப்படை நோக்கம், விசுவாசத்தை உண்டு பண்ணுதல் ( யோவான். 20 ; 30 - 31 ) நோயாளிகள் மீது காட்டப்படும் இரக்கத்தினால், பரிதாபத்தினால் அற்புதங்கள் செய்யப்படுகிறதென்பது தவறான கருத்து. அல்லது பட்டியினால் வாடும் பரிதாபத்தினால் செய்யப்படுகிறது. ஒரு வேளை புதிய ஏற்பாட்டிலும் இப்படிப்பட்ட நோக்கமிருந்தாலும் அதுவே பிரதானமானதல்ல அவை இரண்டாம் பட்சமானதே. இதற்காக அநேக அற்புதங்கள் செய்யப்படவில்லை.

**உதாரணமாக:**

பவுல் : மாம்சத்திலுள்ள முள்ளுடன் விடப்பட்டார்.

லாசரு : இவர் மட்டுமே மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டா. அநேகர் மரித்திருந்தும் கூட.

பெத்சாயிதாவில் : ஒரே ஒரு வியாதியஸ்தன் மட்டுமே சொஸ்தமாக்கப் பட்டான். இதை போலவே இன்றைக்கு அநேக கிறிஸ் தவர்களாக வியாதியஸ்தர்களை சொஸ்தமாக்கக் கூடா மல் இருக்கிறது. இதிலிருந்து நமக்கு ஒன்று நிச்சயம். அற்புதங்களுடைய பிரதானமான நோக்கம் வசனம் உறுதிபடுத்தப்படுவதற்கு என்பது தெளிவாகிறது.

சுவிசேஷம் உறுதிபடுத்தப்பட்டவுடன் (இயேசுவே தேவனுடைய குமாரன் என்று உறுதிபடுத்தப்பட்டவுடன் ) அற்புதம் செய்யப்படும் வரம் படிப்படியாக மறைந்து முடிவுக்கு வந்து விட்டது.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில், முதல் பாதியில் அநேக அற்புதங்கள் குறிக்கப்பட்டுள்ளன. முதல் பாதியில் 28 அற்புதங்களும் பிற்பாதியில் வெறும் 9 அற்புதங்களும் குறிக்கப்பட்டிருக்கிறது. இது அற்பு தங்களுடைய நோக்கம் ( வசனம் உறுதிபடுத்தப்பட்டதும் ) நிறைவானதும் படிப்படியாக மறைந்து போனதற்கான ஆதாரமாகத் திகழ்கின்றது. அதிக உறுதியான வசனம் நமக்கிருக்கும்போது அற்புதங்கள் இங்கு அவசியமற்ற தாய் போனது. அடுத்தபடியாக, இயேசுவும் அவருடைய அப்போஸ்த லர்களும் அற்புதங்கள் செய்து கொண்டிருந்த அதே காலகட்டத்தில் மாய வித்தைக் காரர்களும் ( Pagan Wonder Workers ) இருந்தார்கள். அன்றைய காலகட்டத்தில் அவர்களுக்கும் ஜனங்கள் மத்தியில் அதிக மதிப்பிருந்தது.

மாய வித்தைக்காரனாகிய சீமோன். இவன் ஜனங்களை பிரமிக்க

வைத்தான் (அப். 8 ; 9 – 11) இவன் கீர்த்தி தேசமெங்கும் பரவியிருந்தது. " தேவனுடைய பெரிதான சக்தி " இவன் தான் என்று மக்கள் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆனால், " பிலிப்பு " செய்த அற்புதங்கள் இவன் செய்த சில மாய வித்தைகளை பார்க்கிலும் பலத்தவைகளாக இருந்ததினால் இவனும் ஞானஸ்நானம் பெற போனான். அடுத்து, " எலிமா " இவன் அப்போஸ்தலனாகிய பவுலோடு ஒப்பிட்டு பேசப்பட்டான் (அப்.13 ; 2 –10) இவர்களெல்லாருமே, பரிசுத்த ஆவியானவரின் உண்மை அற்புதங்களோடு ஒப்பிட முடியாத ஏதோ சில வித்தைகள் (Tricks) செய்து மக்களை ஏமாற்றி பணம், புகழ் சம்பாதித்து வந்தனர் இன்றும் இயேசுவின் பெயரை பயன்படுத்தி இதையே செய்து வருகின்றனர்.

### தேவனுடைய அற்புதங்களுக்கும், மாய வித்தைகளுக்குமுள்ள சில வித்தியாசங்கள்

**முதலாவது:** புதிய ஏற்பாட்டு அற்புதங்கள், சூழ்நிலைகளை உருவாக்கி, மனதை மயக்கி செய்யப்படவில்லை.

புறஜாதிகளின் அற்புதங்கள் மருந்துகள், மாய வித்தைகள், இசைக் கருவிகளைக் கொண்டு ஏற்படுத்தும் மயக்க நிலை ஆகியவைகளைக் கொண்டு செய்யப்பட்டது.

**இரண்டாவது:** பலன்களில் வித்தியாசம் காணப்பட்டது. புதிய ஏற்பாட்டு அற்புதங்களில் 100 சதவீதம் வெற்றி.

புறஜாதிகளின் மாயவித்தை அநேக சமயங்களில் தோற்றுபோயுள்ளது. பெரும்பாலும் மனோ ரீதியான வியாதியஸ்தர்களே சொஸ்தமாக்கப்பட்டனர். இன்றும் அவ்விதமாகவே சொஸ்தமாக்கப்படுகின்றனர்.

**மூன்றாவது:** புதிய ஏற்பாட்டு அற்புதங்கள் செய்யப்பட்டதன் நோக்கம் தேவனுடைய வார்த்தை உறுதிபடுத்தப்பட்டது.

ஆனால், புறஜாதிகளின் மாயவித்தைகளின் நோக்கம் பணம் பறிப்பதாகவே இருந்தது. இன்றைக்கும் அப்படியே இருக்கிறது.

### இன்றைய அற்புதங்களை செய்பவர்களின் தவறுகள்

**முதலாவதாக:** வசனம் முழுமையாக பூரணமாக வெளிபடுத்தப்பட்டதை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. இன்றைக்கும் அற்புதங்கள் செய்கிறோமென்று சொன்னால் வசனம் இன்னும் முழுமையாக்கப்படவில்லையென்று அர்த்தம். இவர்கள் மத்தியில் ஒரு தீர்க்கதரிசியிருப்பார்.

அவர் வேதாகமத்துடன் இன்னும் அநேக காரியங்களை சேர்த்துக் கொண்டே வருவார். ஆனால் ஆண்டவருடைய வசனம் சொல்லுகிறது. “ புதிய ஏற்பாடு முழுமையானது ” நம்முடைய ஆவிக்குரிய தேவைகளுக்கு போதுமானது ( 1. பேதுரு.1;3 ) ஜீவனுக்கும் வல்லமைக்கும் யாவற்றிற்கும் போதுமானது.

**இரண்டாவதாக:** கிறிஸ்தவத்தின் தனித்தன்மையை இது சீர்குலைக் கிறது. மந்திரம், ஆவியின் உலகம், இன்னும் சில மத கும்பல்களைப் போல இதுவும் மாறி தனித்தன்மை பாழ்பட்டுப் போய் விடுகிறது.

**மூன்றாவதாக:** யுத்தம், பொருளாதார பிரச்சனைகள், பாவ குற்ற உணர்வுகளால் ஏற்படும் குழப்பங்களில் மக்கள் அற்புதங்களையும் அடை யாளங்களையும் தேடி அலைகின்றனர். ஆனால் தேவனுடைய வார்த்தை யின் மூலம் வழியை கண்டு பிடிப்பதை விட்டு விடுகின்றனர். தேவன் இதை கண்டிக்கிறார்.

**நான்காவதாக:** இந்த மாயவித்தையாகிய அற்புதங்களை செய்கிற வர்கள் தேவனுடைய தன்னிகரற்ற தனித்தன்மையை கேள்விக்குறியாக்கு கின்றனர். தேவன் ஒழுங்கும் கிரமுமானவர். குழப்பத்திற்கு அவர் காரணல் லர். (1 கொரி. 14 ; 33). அநேக நாம காரண கூட்டத்து பிரிவுகள் வெவ்வெறு போதனைகளை போதிக்கிறது. குழப்பம், பிரிவு, கலகம் உண்டாக்குபவை. இதை நாம் கண்டிப்பாக ஏற்கக் கூடாது.

**ஐந்தாவதாக:** விசுவாசித்து நடக்கும் தேவனுடைய திட்டத்திற்கு மாறாக இது காணப்படுகிறது. ( 2 கொரி. 5 ; 7 ) தேவ வார்த்தை உறுதி யாக்கப்பட்டவுடன் சபை குழந்தையாக இருந்து பூரண வளர்ச்சி வளர வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். (1 கொரி. 13 : 8 ; 13) அவருடைய வார்த்தைகளை எடுத்துக் கொண்டு விசுவாசித்து நடக்க வேண்டும். ஆனால் அற்புத அடையாளங்களை தேடி நடக்க அவர் (தேவன்) சொல்ல வில்லை.

இப்படிப்பட்ட காரண காரியங்களால் நாம் கண்டிப்பாக இதை ஏற்கக் கூடாது. இன்றைக்கு நமக்குத் தேவை ‘ புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவம் புதிய ஏற்பாடு தேவனுடைய வார்த்தைகளால் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

“ கிறிஸ்துவின் சபையார் ” இதைத்தான் உலகெங்கிலும் அறிவித்து வருகிறார்கள். இரட்சிப்பின் செய்தியை உலகிற்கு அறிவிப்பதே இவர்களின் நோக்கம். போலியான அற்புதங்களை செய்து பணத்தை சம்பாதிப்பது நோக்கமல்ல. ●

# தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதிருங்கள்

CHARLIE DI PALMA

முதலாவதாக, இது இரகசியமான ஒன்று பற்றியோ அல்லது அற்புதமான ஒன்று பற்றியோ குறிப்பதில்லையென்று பார்த்தோம். மாறாக, புரிந்து கொள்வதற்கு, இது மிகவும் சுலபமான ஒன்று.

தேவன், எனக்கும், உங்களுக்கும், பரிசுத்த ஆவியை துக்கப்படுத்தாதீர்கள் என்று கட்டளை கொடுக்கும் போது மனந்திரும்பாமல், தொடர்ந்து பாவ வாழ்க்கையில் நிலைத்திருக்க வேண்டாமென்றே கூறுகிறார். தேவனுக்கு கீழ்ப்படியாததொரு வாழ்க்கை வாழக்கூடாது.பாவத்திலே வாழ்வது, தேவனுக்கு எதிராக கலகம் செய்து அவரை துக்கப்படுத்துகிறது. அப்படிப்பட்ட பாவங்களிலிருந்து நாம் மனந்திரும்பவில்லையானால், தேவன் நம்மை கடுமையாகத் தண்டிப்பார்.

தேவன் நமக்கு எதிராக யுத்தம் செய்வார். நாம் எதை விதைத்தோமோ அதையே அறுப்போம். பரலோகத்தில் நித்திய இளைப்பாறுதலுக்குள் நாம் பிரவேசிக்க மாட்டோம்.

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியை நாம் துக்கப்படுத்தும் வேறு சில வழிகளை என்னோடு சேர்ந்து படிக்க அழைக்கிறேன். இதைக் கற்றுக் கொள்வதின் நோக்கம், பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துவதை தவிர்ப்பது எப்படி என்பதைத் தெரிந்து கொள்வது தான். இந்த சொற்றொடர் இடம் பெற்றிருக்கும் எபேசியர் நான்காம் அதிகாரத்தைப் படிப்பதன் மூலம் இதைத் தெரிந்து கொள்வோம்.

இப்பொழுது **எபே.4:20-24** வசனப் பகுதியை வாசியுங்கள்.

இங்கே, தேவன் ஒரு காரியத்தை தெளிவாகச் சொல்லுகிறார். அது

நானும், நீங்களும் மாற வேண்டுமென்பது, இதை பழைய மனிதனைக் களைந்து போடுவதின் மூலம் விளக்குகிறார். இதன் பொருள். நானும் நீங்களும் “ **உண்மையான நீதியிலும்**, **பரிசுத்தத்திலும்** ” வாழ வேண்டுமேன்று கேட்கிறார்.

பழைய மனிதனைக் களைந்து போட்டு, புதிய மனிதனைத் தரித்துக் கொள்ளும் இந்த மாற்றம் எப்பொழுது ஆரம்பமாகிறது?

நாம் **விசுவாசித்து** (அப் 18 : 8) , **மனந்திரும்பி** (அப். 2: 38), **இயேசுவில் நமது நம்பிக்கையை அறிக்கையிட்டு** ( அப். 8 : 36, 37 ). **புதிய ஆவிக்குரிய வாழ்க்கைக்காக** ( கொலோ 2 : 12, 13 ). **தண்ணீரில் முழுகி ஞானஸ்நானம் பெறும் போது ஆரம்பமாகிறது**.

இதை உறுதி செய்து கொள்ளும் படியாக, ரோமர் 6 : 3 - 6 வசனங் களில், தேவன் எனக்கும் உங்களுக்கும் என்ன சொல்லுகிறார் என்பதை கவனியுங்கள்.

வசனம் - 6 ல், ரோமாபுரியிலே வாழ்ந்த கிறிஸ்தவர்களைப் பற்றி தேவன் முக்கியமான சிலவற்றைச் சொல்லியுள்ளார். அவர்களுடைய பழைய மனிதன், “ **அவருடனே கூட** ”, அதாவது இயேசுவுடனே கூட சிலுவை யிலறையப்பட்டிருக்கிறான். இங்கே “ **பழைய மனிதனை** ” அவர்கள் சிலுவையிலறைந்து விட்டனர். இயேசுவுடன் கூட அதைச் செய்திருக்கி றார்கள். இனி ஒருபோதும் பாவத்திற்கு அடிமையாயிராதபடிக்கு அப்படிச் செய்திருக்கிறார்கள்.

இந்த வகையாக பழைய மனிதனைக் களைந்து போடுதலைக் குறித்து தான் தேவன் எபே.4 : 20 - 24 ல் பேசுகிறார். அது எப்பொழுது நடந்தது. என்பதைக் கண்டறிய, ஒரு மனிதன் எப்பொழுது, இயேசுவுடனே இணைக் கப்பட்டான் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

வசனம் 3-ல் ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்படுகிறான் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, ஒருவனோ அல் லது ஒருத்தியோ, கிறிஸ்துவுக்குள்ளாகும்படி முறையாக ஞானஸ்நானம் பெறும் போது, முதலாவது கிறிஸ்துவுடனே கூட இணைக்கப்படுகிறார்கள். ஆகையால், **பழைய மனுஷனைக் களைந்து போடுவதும்**, **புதிய மனுஷனைத் தரித்துகு கொள்வதும் தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் ஆரம்பமாகிறது**.

ஆனால் அது மாத்திரம் போதாது! மேலுமாக 3-ம் வசனத்தில் ஒருவன் ஞானஸ்நானம் பெறும்போது, கிறிஸ்துவின் மரணத்திற்குள்ளாக ஞானஸ் நானம் பெறுகிறான் என தேவன் சொல்லுகிறார். அது ஏன் அவ்வளவு முக்கியமானது?

இயேசுவானவர் தம்முடைய மரணத்தின் மூலம் இரத்தத்தைச் சிந்தியுள்ளபடியால் இது நித்திய காலத்திற்கும் முக்கியமானதாகிறது. நம்முடைய கடந்த காலப் பாவங்களைச் சுத்திகரிக்கும் வல்லமை கொண்ட தாக அவருடைய இரத்தம் மாத்திரமே இருக்கிறது. (மத். 26 : 28)! ஆகவே, ஆத்துமாவைச் சுத்திகரிக்கும் இயேசுவின் இரத்தத்தின் மூலமாக நன்மை களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழி. அவருக்குள்ளாகவும், அவரு டைய மரணத்துக்குள்ளாகவும் ஞானஸ்நானம் பண்ணப்படுவது தான்.

ஆகவே தான் இயேசுவானவர், **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்** என்று சொல்லியுள்ளார் ( மாற் 16 : 16 ) ஆகவேதான், இருதயம் குத்தப்பட்ட விசுவாசிகளுக்கு, நீங்கள் மனந் திரும்பி, ஒவ்வொருவரும் **பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்** என்று கட்டளையிடப்பட்டது. ( அப். 2 : 38 )! அதே காரணத்துக்காகத் தான். **எழுந்து உன் பாவங்கள் போகக் கழுவப்படு** என்று சவுலுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது. (அப். 22 : 16) இவைகள், இவன் ஏற்கனவே இயேசுவில் விசுவாசம் வைத்து, மூன்று நாள் ஜெபித்து உபவாசமிருந்து தேவனுக் கேற்ற தனது துக்கத்தை வெளிபடுத்தினதற்குப் பிறகே நடந்தது. (அப். 9 : 8 - 11 ).

ரோமர் 6 : 4ல் அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நா னத்தின் மூலம் ஒருவன் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படுகிறான் என்று தேவன் வெளிப்படுத்துகிறார். மீண்டுமாக, இது. நாம் முதலாவதாக தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுடனே கூட இணைக்கப் படுவதைக் குறிக்கிறது. அத்தோடு, “ அடக்கம் பண்ணப்படுகிறோம் ” என்ற வார்த் தையின் மூலம், வேறொன்றையும் தெளிவுபடுத்துகிறார். வேதாகம ஞானஸ்நானம் என்பது, தண்ணியில் முழுகுதலே ( அடக்கம் பண்ணப் படுதல்) அல்லாமல் தெளித்தாலோ, ஊற்றுதலோ அல்ல என்கிறார்.

ஆகையால், ஒருவன் தன்னுடைய கடந்த காலப் பாவங்களுக்காவும் மீறுதலுக்காகவும் மரிக்கும் படியாக தண்ணீர் ஞானஸ்நானத்துக்குள்ளாகப் போகிறான் ( எபே 2 : 1) அதன் பின்பு, எப்படி, பிதாவானவர் மரணத்துக் குள்ளாக்கும் கல்லறையிலிருந்து கிறிஸ்துவை உயிரோடே எழுப்பினாரோ

அதுபோல, ஆவிக்குரிய மரணத்திலிருந்து, ஆவிக்குரிய ஜீவனுக்காக, முறையான ஞானஸ்நானத்தின் மூலமாக தண்ணீருக்குள் அடக்கம் செய்கிறவர்களையும் தேவன் எழுப்புவார்! ஆகவே, அந்த மனிதன், புதிதான ஜீவனுள்ளவனாய் நடந்து கொள்ளும்படி, தண்ணீரிலிருந்து வெளியே வர முடியும். அந்த மனிதன் இப்போழுது கிறிஸ்துவுக்குள்ளாய் இருக்கிற படியால், " .... **அவன் புதிய சிருஷ்டியாயிருக்கிறான். பழையனவைகள் எல்லாம் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின.** " (II கொரி 5 : 17)! அவனோ அல்லது அவனோ!

தேவன், அந்த மாற்றத்திற்கான வழிமுறைகளை நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் தொடர வேண்டுமென்று விரும்புகிறார். உண்மையில், நாம் ஒவ்வொருவரும், கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டுமென்று கட்டளையிடுகிறார் (II பேது 3 : 18) ஆகையால் ஆவிக்குரிய ரீதியில் வளர மறுப்போமானால், தேவனை துக்கப்படுத்துகிறோம்.

நீங்கள் பழைய மனிதனைக் களைந்து போட்டு புதிய மனிதனைக் தரித்துக் கொண்டீர்களா? நீங்கள் இயேசுவுக்குள்ளும், அவருடைய எண்ணத்துக்குள்ளும் ஞானஸ்நானம் பண்ணபட்டுவிட்டீர்களா? உங்களுடைய கடந்த காலப் பாவங்கள் கழுவப்பட வேண்டுமென்ற, குறிப்பிட்ட நோக்கத்திற்காக, தண்ணீருக்குள் மூழ்கி ஞானஸ்நானம் பெற்று விட்டீர்களா? இவைகளுக்கெல்லாம், உங்கள் பதில் இல்லை என்பதாக இருந்தால், நீங்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துகிறீர்கள். தயவு செய்து, பாவ மன்னிப்புக்காக, கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்படுவதன் மூலம், தேவனைத் துக்கப்படுத்துவதை நிறுத்துங்கள்!

## என்னை மாற்றும்

கர்த்தாவே என் சொல்லிலும் செயலிலும் மற்றவர்கள் உம்முடைய இரக்கத்தையும், அன்பையும் காணும்படி என்னை ஒளிவீசும் விளக்காக மாற்றும்.